DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 177 /2018 |
| Deposition of witness | : | P W- 1 |
| Name | : | பாஸ்கர் |
| Father's /Husband Name | : | பாவாடை |
| Village | : | வீரவாடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 71 |
| Occupation | : | ஓட்டுனர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 11th day September, 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

ஆஜர் எதிரி மற்றும் அவரது மனைவி மகேஸ்வரியை எனக்கு தெரியும். எனது மகள் ராஜகீர்த்தியை புலிவலத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளேன். எனது மகள் ராஜகீர்த்திக்கு ஒரு இடம் கூத்தனூர் சரஸ்வதி அம்மன் கோவில் செல்லும் சாலையில் வாங்கி தருவதற்காக கேட்டுக்கொண்டிருந்தபோது கூத்தனூர் துணை ஊராட்சி மன்ற தலைவர் காளிமுத்து என்பவர் என்னிடம் மகேஸ்வரி, விஜயபாபு என்பவருடைய இடத்தை விற்பனை செய்ய இருப்பதாக என்னிடம் கூறினார். ஆஜர் எதிரி விஜயபாபு அவருடைய மனைவி மகேஸ்வரியும் என்னிடம் வந்து குளத்துமேட்டுத்தெரு செதளபதி கிராமத்தில் உள்ள 90 சதுர மீட்டர் அளவுள்ள இடத்தை விற்கிறோம் என்று என்னிடம் கூறினார்கள். அதற்கு கிரயத்தொகையாக ரூ.3,50,000/-ம் பேசினோம். அதற்கு முன் தொகையாக ரூ.3,00,000/-த்தை எதிரிகளிடம் கொடுத்தேன். மீதமுள்ள ரூ.50,000/-த்தை கிரய பத்திரம் பதிவு செய்து தரும்போது தருகிறேன் என்று கூறினேன். என்னிடம் மேற்படி சொத்தில் எந்த வில்லங்கமும் இல்லை என்று சொன்னதன் பேரில் தான் முன்பணமாக ரூ.3,00,000/-த்தை கொடுத்தேன். பின்னிட்டு மேற்படி சொத்தை மேலருத்திரகங்கையை சேர்ந்த இன்பரசி என்பவரிடம் பெந்தகம் ரூ.2,00,000/-த்திற்கு வைத்து பேரளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்திருந்த விபரத்தை நான் எதிரிகளை கேட்டுத்தெரிந்துக்கொண்டேன். எதிரிகளை நான் தேடியபோது அவர்கள் நீடாமங்கலத்திற்கு குடிபெயர்ந்து சென்றுவிட்டார்கள். நான் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி பேரளம் காவல்நிலையத்தில் எதிரிகள் மீது எதிரிகள் என்னை ஏமாற்றி மோசடி செய்துவிட்டு ரூ.3,50,000/-த்தை பெற்று சென்றுவிட்டதால் என்று நடவடிக்கை எடுக்க வேண்டி பேரளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் தான செட்டில்மெண்ட் பத்திரம் நகலை நான் போலிசாரிடம் கொடுத்தேன். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகலில் இரண்டாவது பக்கத்தில் இன்னார் என்று நிரூபித்தவர் என்று உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம்

மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 22.11.2013–ம் தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தின் அசலை போலிசாரிடம் கொடுத்தேன் ஆனால், அவர்கள் இவ்வழக்கில் அதனை தாக்கல் செய்யாமல் மறைத்துவிட்டார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 10.10.2012–ம் தேதியிட்ட பெந்தக கடன் பத்திரம் எதிரி மகேஸ்வரி இன்பரசி என்பவருக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட பெந்தக கடன் பத்திரத்தின் சான்றிட்ட நகலை போலிசாரிடம் கொடுத்தேன். ஆனால், அவர்கள் இவ்வழக்கில் அதனை தாக்கல் செய்யாமல் மறைத்துவிட்டார்கள். அந்த பத்திரத்தில் எதிரி மகேஸ்வரி எழுதிக்கொடுத்துள்ளார் அதில் சாட்சியாக அவரது கணவர் விஜயபாபு கையொப்பம் செய்துள்ளார். இது சம்பந்தமாக பேரளம் போலிசார் என்னை விசாரித்தார்கள். இன்றைய தேதி வரை எனக்கு வர வேண்டிய தொகை எதிரியிடமிருந்து வரவில்லை என்னை ஏமாற்றிவிட்டார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**–

யார் முன்னிலையில் பணம் கொடுத்தேன் என்றால் காளிமுத்து என்பவர் முன்னிலையில் பணம் கொடுத்தேன். அவர் எனது நண்பர் என்றால் சரியல்ல பழக்கம் மட்டுமே. கூத்தனூரில் மாரிமுத்து என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. பணம் கொடுப்பதற்கு முன்பு நிலத்தின் மூலபத்திரம் வில்லங்க சான்றை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. நான் வட்டிக்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் பொய் புகார் அளித்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் வழக்கு போடுவதாக எதிரியை மிரட்டினேன் என்றால் சரியல்ல. எனக்கு காசோலை வழக்கு இந்நீதிமன்றத்தில் இரண்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.09.15 18:19:30 +0530